Mrs. S. Uthayarasa,
Dept. of Geography.

# யாழ்ப்பாணப் புவியியலாளன்

## இதழ் - 20

## 2006 - 2007

ஆசிரியர்
**செல்வி. மேரி யூபிறேசியா அல்பிறெட்**

ஆலோசக ஆசிரியர்
**கலாநிதி. க. சுதாகர்**

புவியியற் கழகம்
புவியியற்றுறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்,
இலங்கை.
2008.

# யாழ்ப்பாணப் புவியியலாளன்

இதழ் 20



புவியியற்கழகம், புவியியற்றுறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.
2008

யாழ்ப்பாணப் புவியியலாளன்
இதழ் - 20, 96 - 102, 2006 - 2007

புவியியற்கழகம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

# பொருளாதாரத்தில் போக்குவரத்தின் முக்கியத்துவம்

சு. உதயராசா
சிரேஷ்ட விரிவுரையாளர்,
புவியியற்றுறை,
யாழ். பல்கலைக்கழகம்.

## 1.0 அறிமுகம்

பூமியின் மேற்பரப்பில் ஒரு இடத்திற்கும் மற்றோர் இடத்திற்கும் இடையேயுள்ள தொடர்புகளை நவீன போக்குவரத்து வசதிகள் பெருமளவிற்கு மாற்றிவிட்டன என்றே கூறலாம். பத்தொன்பதாம் நூற்றாண்டிலே உருக்கு கண்டுபிடிக்கப்பட்டதைத் தொடர்ந்து தண்டவாளங்களினாலும், இருபதாம் நூற்றாண்டில் வீதிகள் தாரிடப்பட ஆரம்பித்ததைத் தொடர்ந்து மோட்டார் போக்குவரத்தினாலும், உலகப் போக்குவரத்து முறைகளிடையே ஒரு புரட்சியே ஏற்பட்டது. மேலும் இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஜெற் விமானங்கள், மற்றும் வணிகத் தேவைகளுக்கான நிலத்தடிக் குழாய்களும் போக்குவரத்தைப் பொறுத்தவரை முன்னெப்போதும் இல்லாதபடி வசதியும் வேகமும் கொண்ட ஒரு புதிய யுகத்தையே உருவாக்கியுள்ளன. பண்டைக் காலத்தில் மிகத் தாமதமாகவே பொருட்களை இடத்திற்கு இடம் கொண்டு செல்லும் வசதிகள் இருந்தபோது பல்வேறு பிரதேசங்கள், நகரங்கள், மற்றும் கிராமங்கள் ஆகியவற்றிற்குப் பெருமளவில் தமது சுயதேவைகளைப் பூர்த்திசெய்யவேண்டிய ஒரு நிலைமை இருந்தது. போக்குவரத்து கடினமாகவும், தாமதம் மிக்கதாகவும் இருந்திருந்தால் தற்போது அமெரிக்காவில் காணப்படுவது போன்ற பாரிய பொருளாதார அலகுகள் உருவாகியிருக்க முடியாது. நெருக்கமானதும், வேகமானதுமான போக்குவரத்து வசதிகள் உருவாகியமையினாலேயே சோவியத் குடியரசு போன்ற பல்தேசிய அரசியல் அலகுகளும் உருவாகின. போக்குவரத்து முறைகளில் ஏற்பட்ட வேகமானது பெரிய அளவில் பொருட்களை இடமாற்றம் செய்வதைச் சாத்தியமாக்கியுள்ளதோடு சுயதேவைப் பூர்த்திகள் மூலம் பெருமளவில் பொருட்களைக் கொண்டு செல்வதற்கு வழிசமைத்துள்ளது.

துரிதமான போக்குவரத்து, மனிதன் தனது உற்பத்தியில் விசேட கவனம் செலுத்தி தனது பொருட்களை ஏனைய இடங்களிலுள்ள பொருட்களுக்குப் பதிலாகப் பண்டமாற்றம் செய்து கொள்ள வழிசமைத்தது. இப்பண்டமாற்று முறையானது வரலாற்றின் ஆரம்பத்திலிருந்தே நிலவி வந்ததெனினும், பொருட்களைக் கொண்டு செல்வது மிக மந்த கதியிலேயே நடைபெற்ற காரணத்தால், விரைவில் பழுதடையாதவையும், அதேநேரம் அதிக பெறுமதி மிக்கவையுமான பொருட்களை மாத்திரமே வணிகத் துறையின ரால் கையாள முடிந்தது. ஆனால் இன்றோ விவசாயப் பொருட்களாயினும் சரி, கைத்தொழில் உற்பத்திப் பொருட்களாக இருப்பினும் சரி சில குறிப்பிட்ட பொருட்களை மிகப் பரந்த பிரதேச அளவில் விசேடமாகச் செய்யக்கூடியதாக உள்ளது. இதனால் ஒரேவிதமான பொருளாதார

அபிவிருத்தி நோக்கத்தைக் கொண்ட பரந்த பிரதேசங்கள் உருவாகியுள்ளதோடு, முன்னர் புவியியலாளர்களால் வெறுமனே இயற்கைப் பிரதேசங்களாகக் கணிக்கப்பட்ட நிலை மாறி இன்று மனித நடவடிக்கையின் காரணமாக அவை பொருளாதாரப் பிரதேசங்களாக மாறி யுள்ளமை குறித்து கவனம் செலுத்தவேண்டிய நிலையும் ஏற்பட்டுள்ளது.

எங்கெங்கே உற்பத்திச் செலவு குறைவாக இருக்கிறதோ அங்கே அதிகமாக உற்பத்தி களை மேற்கொள்வதற்கு போக்குவரத்து வசதிகள் உதவுகின்றன. அதுமட்டுமன்றி கூடுதலான விலையைப் பெற்றுத் தரக்கூடிய சந்தைகளுக்கு உற்பத்திப் பொருட்களை எடுத் துச் செல்லவும் அது உதவுகிறது. போக்கு வரத்தின் வளர்ச்சி பாரிய அளவிலான வணிக முயற்சிகளை ஊக்குவிப்பது மட்டுமல்லாமல் கலாசார, சமூக நடவடிக்கைகளுக்கும் ஊக்கம் அளிக்கிறது. இன்று நாம் சிறந்த பாடசாலை களில் கல்வி கற்கவும், சிறந்த வைத்திய உதவி களைப்பெறவும், சிறப்பான முறையில்வாழ்க்கை நடாத்துவதற்கும் அது உதவுகிறது. போக்கு வரத்தில் ஏற்பட்ட துரித வேகம் காரணமாக நமக்குச் சற்று அதிகமாகக் கிடைக்கும் ஓய்வு நேரத்தை எத்தனையோ பயனுள்ள வழிகளில் செலவிடக்கூடியதாக நவீன நகரங்கள் இன்று போக்குவரத்து வசதிகளிலேயே தங்கியிருக் கின்றன. போக்குவரத்துப் பாதைகள் தடைப்படு மானால் ஒரு நாட்டின் பொருளாதாரமே முடங் கிப் போகலாம். இதனாலேயே போர்க்காலங் களில் போக்குவரத்து வழிகள் தாக்குதலுக்கு இலக்காகின்றன. நகர விரிவாக்கத்திற்கும் போக்குவரத்தே உதவுகிறது. போக்குவரத்து தொடர்புகள் மட்டும் ஏற்பட்டிருக்காவிட்டால் உல கில் உள்ள பூங்காக்கள் நிரம்பிய நகரங்கள், பலர் வாழக்கூடிய இடங்கள் நிரம்பிய பரந்த நகர்ப் புறங்கள், மற்றும் திட்டமிட்டு அமைக்கப் பட்ட உப நகரங்கள் முதலியவை தோன்றி யிருக்க வாய்ப்பு இருந்திருக்காது. கிராமங்கள், நகரங்களை இணைத்து ஒரு நாடு முழுவதை யும் ஒரே அலகாக ஆக்குவதற்கு போக்குவரத்து வசதிகள் பெரிதும் உதவுகின்றன. ஒரு நாட்டின் பொருளாதார நிலைமை ஏற்ற இறக்கமின்றிச் சரியான நிலையில் இருக்க வேண்டுமென்றால் போக்குவரத்து இன்றியமையாததாகும். இந்த வகையில் ஒவ்வொரு செயற்பாட்டிலும் போக்கு வரத்தின் முக்கியத்துவத்தை பொருளாதார ரீதியாக நோக்குவோம்.

## 2.0 (போக்குவரத்து) ஒரு பொது நலப்பணி

மின்சாரம், நீர் விநியோகம் முதலிய பொது நலப் பணிகளைப்போல் போக்குவரத்தும் ஒரு முக்கிய பொதுநலப் பணியாக விளங்குகிறது. மனித சமுதாயத்தின் அடிப்படைத் தேவை களை நிறைவு செய்து வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் காட்டுகிறது. மேலும் ஒரு நாட்டின் பொருளாதார உயிர் நாடியானது திறமை வாய்ந்த தேவையான போக்குவரத்தைச் சார்ந்திருக்கிறது. போக்குவரத்துச் செலவு (Transport Cost) எவ்வளவுக் கெவ்வளவு குறைவாக இருக்கிறதோ அவ்வளவிற்கு அவ் வளவு பொருளின் உற்பத்தி விலை குறைந்து மலிவான விலைக்கு அயல் நாட்டுச் சந்தைகளில் விற்க முடிகிறது. பொருட்களின் உற்பத்திக்கு வேண்டிய மூலப்பொருட்களைக் குறைந்த செலவில் போக்குவரத்துச் சாதனங்கள் மூலம் வேறு இடங்களில் இருந்து கொண்டுவந்தால்

தான் உற்பத்திப் பொருளின் உற்பத்திச் செலவு குறையும். உற்பத்திச் செலவு குறைந்தால் மலிவான விலைக்கு பொருட்களை விற்க முடியும். அதிக அளவில் பொருட்களை ஏற்று மதி செய்தால் ஏற்றுமதி செய்யும் நாடு அதிகள விற்கு அன்னியச் செலாவணியை (Foreign Exchange) பெற்றுப் பொருளாதாரத்தில் செழிப்புற்று இருக்கமுடியும். இல்லையேல் வளர்ச்சி குன்றிவிடும். பொதுவாக இன்றைய நாளில் போக்குவரத்து வசதியின்றி மனிதன் வாழமுடியாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டுவிட்டது. போக்குவரத்து மனிதனின் அன்றாட வாழ்க்கை யோடு ஒன்றிப் பிரித்துப் பார்க்கமுடியாத அளவை அடைந்துவிட்டது. அந்த அளவிற்குப் போக்குவரத்து ஒரு பெரும் பொதுப்பணியாகத் திகழ்கிறது.

### 3.0 போக்குவரத்தும் உற்பத்தியும்

பொருளியலில் போக்குவரத்து உற்பத்தியில் "இடப் பயனை" (Place Utility) ஏற்படுத்து கிறது. எந்த இடத்தில் இயற்கை அதிக அள விற்குப் பொருட்களைத் தருகின்றதோ அல்லது இயற்கைச் சூழ்நிலை காரணமாகப் பெருமள விற்குப் பொருட்கள் உற்பத்தி செய்யப்படு கின்றதோ அந்த இடத்திலிருந்து பொருட்கள் கிடைப்பதற்கரிய அல்லது குறைவாக உற்பத்தி செய்யப்படும் இடங்களுக்குக் கொண்டு செல்ல வேண்டியிருக்கிறது. திறமை வாய்ந்த போக்கு வரத்துச் சாதனங்களால் குறுகிய காலத்திற்குள் பொருட்களை அப்படியே ஓரிடத்திலிருந்து மற் றோர் இடத்திற்கு குறைந்த செலவில் கொண்டு செல்லமுடியும். போக்குவரத்துச் செலவு குறைந் தால் பொருளின் விலை குறைகிறது. விலை குறையவே நுகர்வோரின் தேவை அதிகமா கிறது. தேவை அதிகரிக்க உற்பத்தி அதிகரிக்கப் படுகிறது. ஓரிடத்தில் அதிக உற்பத்திக்கு வசதி யிருந்தால் மட்டும் உற்பத்தி அதிகரிக்காது. வேறு இடங்களுக்குப் பொருட்களை எடுத்துச் செல்லும் வசதியிருந்தால்தான் உற்பத்தி அதி கரிக்கும். இல்லையெனில் உள்நாட்டுத் தேவை களுக்கு மட்டுமே உற்பத்தி மேற்கொள்ளப்படும்.

### 4.0 போக்குவரத்தும் பரிவர்த்தனையும்

எல்லா நாடுகளும் எல்லாப் பொருட்களை யும் உற்பத்தி செய்வதற்கான வசதிகளைப் பெற்றிருக்க வில்லை. சில நாடுகள் சிலவற்றை மட்டும் உற்பத்தி செய்வதற்கான இயற்கை வசதி களைப் பெற்றிருக்கின்றது. உதாரணமாக மலாயா இறப்பர், தகரம் முதலியவற்றையும் மணிலா ஒரு வகைச் சணலையும், குவைத் எண்ணைப் பொருட்களையும் உற்பத்தி செய் யும் வசதிகளைப் பெற்றிருக்கின்றன. போக்கு வரத்து இல்லை யென்றால் இந்தப் பொருட் களைப் பிறநாடுகள் பெறுவதற்கான வழி இல் லாமல் ஒவ்வொரு நாடும் எல்லாப் பொருட் களையும் உற்பத்தி செய்ய வேண்டிய அவசிய மேற்படும். இதனால் உழைப்பு, செல்வம் என்ப வற்றில் விரயம் ஏற்படும். மேலும் சில நாடுகள் பல பொருட்களை இயற்கையின் காரணமாக உற்பத்தி செய்யவே முடியாது. நாம் இன்று பல பொருட்களை நுகர முடிவதற்குக் காரணம் போக்குவரத்தே ஆகும். நாட்டு மக்கள் போக்கு வரத்தால் பல பொருட்களைப் பெற்று வாழ்க் கைத் தரத்தை உயர்த்திக் கொள்ளமுடிகிறது. பொதுவாக இன்றைய நாளில் ஒவ்வொரு நாட்டின் பொருளாதார முன்னேற்றமும் போக்கு வரத்தைப் பொறுத்தே உள்ளது. போக்குவரத்து இன்றி பரிவர்த்தனை இல்லை.

## 5.0 போக்குவரத்தும் பகிர்வும்

பகிர்வுப் பிரச்சினை, தேசிய உற்பத்தி முறையில் உற்பத்தி செய்யப்பட்ட செல்வங்களை, உற்பத்தி மூலக்கூறுகளுக்கு ஒதுக்கீடு செய்து காட்டுகிறது. உற்பத்தி மூலக்கூறுகளின் பலன்களில் போக்குவரத்து எவ்வாறு செல்வாக்குச் செலுத்துகின்றது என்பதை அவதானிப்போம்.

**வாடகை** (Rent) : கிராமப்புற, நகரப்புற வாடகை திறமை வாய்ந்த வளர்ச்சியுறும் போக்குவரத்தால் அதிகமாகிறது. விவசாய நிலத்தின் வாடகை அந்த நிலத்தின் உற்பத்தித் திறனையும் அது அமைந்திருக்கும் இடத்தையும் பொறுத்திருக்கிறது. விவசாய நிலத்தின் உற்பத்தித் திறன் போக்குவரத்தைச் சார்ந்திருக்கிறது. ஏனென்றால் பயிர் விளைச்சலுக்கு வேண்டிய உரம், கிருமி நாசினி, களைநாசினி முதலியன ஏனைய இடங்களிலிருந்து கொண்டு வர வேண்டியிருக்கிறது. நகரங்களில் கட்டடம், நிலம் ஆகியவற்றின் வாடகை அவை அமைந்திருக்கும் இடத்தைப் பொறுத்திருக்கிறது. எங்கெல்லாம் போக்குவரத்து வசதி அதிகமாக இருக்கிறதோ அந்தந்த இடங்களில் வாடகை அதிகமாக இருக்கிறது.

**வட்டி** (Interest) : வளர்ச்சியடைந்த போக்குவரத்து வசதிகள் வட்டி வீதத்தை அதிகப்படுத்தி வெவ்வேறுபட்ட சந்தைகளில் நிகழும் வட்டிவீத வேறுபாடுகளைக் குறைக்கின்றன. அத்துடன் வளர்ச்சியடைந்த போக்குவரத்து அதிக பணத்தை உற்பத்திப் பெருக்கத்திற்காக முதலீடு செய்வதற்கு ஊக்கமளிக்கிறது. அப்படி ஊக்குவித்து உற்பத்தியைப் பெருக்குவதால் பணப்புழக்கம் அதிகம் ஏற்படுகிறது. எவ்வளவுக்கெவ்வளவு பணப்புழக்கம் அதிகரிக்கிறதோ அவ்வளவிற்கு அவ்வளவு வட்டிவீதம் குறைகிறது. வட்டிவீதம் அதிகம் ஏறாமலும், அதிகம் இறக்காமலும் ஒரே நிலையாக இருக்க போக்குவரத்து மிக முக்கியமாகும்.

**கூலி** (Wages) : வேலையில்லா இடங்களிலிருந்து வேலையிருக்கும் இடங்களுக்கு வேலையாட்களைப் போக்குவரத்து எடுத்துச் செல்கிறது.

**இலாபம்** (Profit) : தொழில் இயக்குநர் தன்னுடைய தொழிலைத் திறம்பட நடத்தி இலாபமடைய போக்குவரத்து மிகவும் துணை புரிகிறது. பல இடங்களிலிருந்து வரும் தேவைகளுக்கும் அல்லது பல இடங்களிலிருந்து பொருட்களை வாங்கி விற்பதற்கும் போக்குவரத்து மிக இன்றியமையாதது.

## 6.0 போக்குவரத்தும் நுகர்வோரும்

போக்குவரத்துக் கட்டணம் குறைந்தால் பொருளின் உற்பத்தி விலையும் குறைகிறது. உற்பத்தி விலை குறைந்தால் நுகர்வோர் மலிவான விலைக்குப் பொருட்களை வாங்க முடிகிறது. போக்குவரத்து இருந்தால் தான் பொருட்கள் நுகர்வோருக்குக் கிடைக்கின்றன.

## 7.0 போக்குவரத்தும் விலை நிர்ணயமும்

பொருட்களின் விலை நிர்ணயத்தில் போக்குவரத்து முக்கிய இடம்பெற்றுள்ளது. போக்குவரத்து வசதியில்லாத இடத்தில் பொருட்கள் தேவைக்கு மேல் அதிகம் உற்பத்தி செய்யப்பட்டாலோ அல்லது விளைந்தாலோ அவற்றின் விலை சரிகிறது. போக்குவரத்து வசதியிருப்பின் மிகுதிப் பொருட்களைத் தேவையுள்ள இடங்களுக்கு ஏற்றுமதி செய்து விலை

சரியாமல் கட்டுப்படுத்தமுடிகிறது. தேவையும் நிறைவு செய்யப்படுகிறது.

## 8.0 போக்குவரத்தும் விநியோக சமப்படுத்தலும்

எந்த ஒரு நாடு போக்குவரத்து வசதிகளில் முன்னேறி இருக்கிறதோ அந்த நாடு தான் உற்பத்தி செய்யும் பொருளை மட்டும் நம்பி இருப்பதில்லை. தனக்கு வேண்டிய பொருட்களை மற்ற நாடுகளிலிருந்து வெகு தொலைவில் இருந்தாலும்கூட பெற்றுக்கொள்ளுகின்றது. உதாரணமாக பிலடெல்பியா (Philadelphia) அருகிலுள்ள மாநிலமான தெற்கு நியூஜெர்ஸி (South new Jersey) யிடமிருந்து தனக்குத் தேவையான உருளைக்கிழங்கை வாங்குவதில்லை. வெகு தொலைவிலுள்ள வடக்கு நியூயோர்க்க் (Northern New York), மிக்சிகான் (Michigan) ஆகிய இடங்களிலிருந்து வெகுமலிவாகப் பெறுகிறது. இதற்குக் காரணம் திறம்பட வளர்ச்சியடைந்துள்ள போக்குவரத்தின் சாதனையேயாகும். நீண்ட தொலைவில் உள்ள இடங்களிலிருந்து மலிவாகக் கிடைக்கும் பொருட்களைக் கொண்டுவருவதற்குச் சரியான போக்குவரத்து இல்லையென்றால் அருகில் கிடைக்கும் பொருட்களுக்கு அதிக விலை கொடுத்து வாங்கவேண்டி நேரிடும். அத்துடன் போர் நெருக்கடி காரணமாகவோ அல்லது பொருளாதார வீழ்ச்சி அல்லது சிதைவு காரணமாகவோ ஓரிடத்தில் பொருட்களுக்கு பற்றாக்குறை ஏற்பட்டால் போக்குவரத்து மூலம் பொருள் எங்கு அதிகம் இருக்கிறதோ அங்கிருந்து கொண்டுவந்து பற்றாக்குறையுள்ள இடத்திற்கு விநியோகித்து அதன் மூலம் விலை ஏறாமல் தடுக்க முடிகிறது.

## 9.0 போக்குவரத்தும் போட்டியும்

போக்குவரத்து வசதி எல்லா இடங்களிலிருந்தும் பொருட்களின் அளிப்புச் சமமாக ஆக்கப்படுவதால் வியாபாரிகளுக்குள் அல்லது உற்பத்தியாளர்களுக்குள் போட்டி ஏற்படுகிறது. அப்படிப் போட்டி ஏற்படும்போது விலை குறைக்கப்படுகிறது. அதன் மூலம் நுகர்வோர் பொருட்களை மலிவான விலைக்கு வாங்குகின்றனர். சில சமயங்களில் போக்குவரத்துத் தொழில்களுக்குள்ளே போட்டி ஏற்படுவதால் போக்குவரத்துச் சாதனங்கள் மிகுதியாகின்றன. சாதனங்கள் பெருகப்பெருக போக்குவரத்துக் கட்டணம் குறைகிறது. கட்டணம் குறைந்தால் பொருட்களின் உற்பத்தி விலை குறைந்து நுகர்வோருக்கு மலிவான விலைக்கு பொருட்கள் கிடைக்கின்றன. மேலும் போட்டி ஏற்படுவதால் பயணிகளும் செம்மையான பணியையும், வசதிகளையும் பெறுகின்றனர்.

## 10.0 போக்குவரத்தும் விவசாயமும்

விவசாய உலகத்தில் போக்குவரத்தின் பங்கை மதிப்பிட்டுக்கூற இயலாது. நிலத்தை உழ ஆரம்பிக்கும் நாள் தொடக்கம் கதிர் அறுக்கும் நாள் வரை ஒவ்வொரு படியிலும் போக்குவரத்து பயன்படுகிறது. உரம் முதலியவற்றைக் கொண்டு செல்லவும், அறுவடை செய்த கதிர் மணிகளைக் களம் கொண்டு போய்ச் சேர்க்கவும், களத்திலிருந்து பிரிக்கப்பட்ட பொருட்களை எங்கு கொண்டுபோய்ச் சேர்க்கவேண்டுமோ அங்கு எடுத்துச் செல்லவும், போக்குவரத்து பெரிதும் பயன்படுகின்றது. அத்துடன் பொருட்களைச் சந்தைக்கு எடுத்துச் சென்று விற்கவும் போக்குவரத்து இன்றியமையாததாகிறது.

## 11.0 போக்குவரத்தும், தொழில் முன்னேற்றமும்

போக்குவரத்து இன்றி தொழிற்சாலைகள் இயங்கவோ, புதுத் தொழிற்சாலைகள் தோன்றவோ முடியாது. தொழிற்சாலைகளுக்குப் பொருட்களை உற்பத்தி செய்ய மூலப்பொருட்களைக் கொடுக்கவும் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களை மற்ற இடங்களுக்கு ஏற்றுமதி செய்து கொடுக்கவும், வேலை செய்யும் தொழிலாளர்களை ஓரிடத் திலிருந்து மற்றோர் இடத்திற்கு எடுத்துச் செல்லவும் போக்குவரத்து உதவியாக இருக்கிறது.

## 12.0 போக்குவரத்தும் அன்னிய செலாவணியும்

போக்குவரத்து ஒரு நாட்டிற்கு அந்நிய செலாவணியை ஈட்டித்தருகிறது. குறிப்பாக கப்பல் போக்குவரத்தும், விமானப் போக்குவரத்தும் நாடுகளுக்கு அன்னிய செலாவணியை அளிக்க வல்லனவாக உள்ளன. அயல் நாடுகளுக்குச் செல்லும் கப்பல்கள், விமானங்கள் தங்கள் பணிகளை (சேவைகளை) அளிப்பதன் மூலம் அன்னிய செலாவணியை ஈட்டித்தருவது மட்டுமல்லாமல் அந்த நாட்டுப் பணிகள் (சேவைகள்) பொருட்கள் இவற்றை ஏற்றிச் செல்வதன் மூலம் அன்னிய செலாவணிச் செலவு செய்யப்படுவது தவிர்க்கப் படுகிறது.

## 13.0 சமூக நலமும், போக்குவரத்தும்

சமூக நலனில் போக்குவரத்தின் பங்கு மிகவும் குறிப்பிடத்தக்கதாகும். முதலில் சிறப்புத் தேர்ச்சி மூலம் வாழ்க்கைத்தரம் உயர போக்குவரத்து அடிப்படையாக உள்ளது. இரண்டாவதாக செய்திகளையும், மனிதனின் எண்ணங்களையும் பரப்பி அவன் முன்னேற்றமடைய போக்குவரத்து உதவுகின்றது. சமூகம், விஞ்ஞானம், ஒழுக்கம், மதம் ஆகியவற்றைப் பற்றி வெளியிடும் செய்தித் தாள்களும், பருவ வெளியீடுகளும் (Periodicals), துண்டுப் பிரசுரங்கள் (Pamphlets) வெகுவிரைவில் ஓரிடத்தில் இருந்து மற்றைய இடங்களுக்கு தற்காலத்தில் போக்குவரத்து முன்னேற்றத்தால் கிடைக்கின்றன. கிராம வாசிகளும், நகர வாசி களும் அடிக்கடி பல இடங்களில் ஒன்றுகூடித் தங்களுக்கிடையேயுள்ள பேச்சு வகைகளையும் (Dialect), கலாசாரங்களையும் பரிமாறிக் கொள்ள போக்குவரத்தினால் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. நீண்டகாலமாக முன்னேற்ற வளர்ச்சிக்குத் தடையாக இருந்த பண்டைய மூட நம்பிக்கைகளும், பழக்கங்களும் மெதுவாக அகற்றப்படுகின்றன.

## 14.0 போக்குவரத்தினால் ஏற்படும் அரசியல் விளைவு

போக்குவரத்தினால் ஏற்படும் அரசியல் பலன்கள் முக்கியமாக இரண்டு வகையாகும். ஒன்று தேசிய ஒருமைப்பாட்டைப் பாதுகாத்தலும், வளர்த்தலுமாகும். பொருளாதாரத்தில் ஒரு பிரதேசம் (Region) மற்றொரு பிரதேசத்தை நம்பியிருப்பதால் தேசிய ஒற்றுமை மிக முக்கியம். அந்த தேசிய ஒற்றுமைக்கு உறுதுணையாக இருப்பது போக்குவரத்தாகும். மக்கள் இடம்விட்டு இடம் செல்வதாக இருந்தாலும் செய்தித் தொடர்பு கொள்வதாக இருந்தாலும் போக்குவரத்தின் உதவியை நாடவேண்டியிருக்கிறது. அத்துடன் ஒரு நாட்டின் எல்லையையும் அதன் திறனையும் போக்குவரத்து நிர்ணயிக்கின்றது. இரண்டாவதாக நாட்டைப்

பாதுகாப்பதற்கு வேண்டிய போர்க்கருவி களையும், படை வீரர்களையும் ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்குப் போக்குவரத்து வசதிகளி னால் கொண்டு செல்லப்படுகின்றது. இதனால் நாடு பலப்படுத்தப்படுகிறது. போக்குவரத்து இன்றி இவை நடைபெறமாட்டாது.

## 15.0 முடிவுரை

இவ்வாறாக மனித நடவடிக்கைகள் அனைத் திற்கும் இன்று போக்குவரத்தானது மிக முக்கிய மானதொன்றாகக் காணப்படுகின்றது. அதா வது மனிதனும், பொருளும் இடம்பெயர்ந்து செல்லக் காரணமாய் விளங்கி, நாகரிக முன்னேற்றத்தின் ஒவ்வொரு படியிலும் போக்குவரத்து மனிதனின் செயல்களில் முக்கியத்துவம் பெற்று விளங்குகின்றது. தற்காலத்தில் பொருளதாரமும் வாணிபமும் வளர்ச்சிபெற்று ஒரு நாட்டுடன் மற்றொரு நாடு தொடர்பு கொண்டுள்ளது என்றால் அது போக்குவரத்தின் செயலேயாகும். இவ்வாறாக மேற்குறிப்பிட்ட பல்வேறுபட்ட பொருளாதாரச் செயற்பாடுகளிலும் போக்குவரத்தின் முக்கி யத்துவத்தைத் தெளிவாக விளங்கிக்கொள்ள முடிகின்றது.

## உசாத்துணை நூல்கள் :


Dubey, R.N. (1974). *Economic Geography of India.* India : Kitab Mahal.

Fryer, D.W. (1965). *World Economic Development.* New Delhi : Mc Graw – Hill Book Company.

Janaki, V.A. (1985). *Economic Geography.* India : Naurang Rai Concept Publishing Company.

Morgan, W.B., & Pugh, J.C. (1974). *Economic Geography.* India : Methuen and Co.Ltd.

Robinson, H. (1975). *Geography for Business Studies.* London : Mc Donald and Evans Ltd.

Sadhukhan, S.K.(1994). *Economic Geography and Appraaisal of Resources.* S. Chand and Company Ltd.


❖ ❖ ❖